முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2020 சனவரி

# (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2020-01-19
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களுக்குத்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதிசார் சுயாதீனம் என்பது ஒருவரின் எஞ்சிய வாழ்நாட்கள் முழுவதும் தொழிலுக்கு அமர்த்தப்படாது அல்லது பிறரிடம் தங்கியிராது தமது வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதுமான வருமானத்தினைக் கொண்டுள்ள நிலையாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிதிசார் சுயாதீனத்தினை அடையக்கூடிய மூன்று (03) வழிகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

பாதீடுகளைத் தயாரிப்பதில் நடைமுறையான பாதீட்டுக் கட்டுப்பாடானது ஒவ்வொரு முகாமையாளருக்கும் பொறுப்பான பகுதிகளை இனங்காணுகிறது. மேலும் நிறுவனங்கள் கிரமமாக உண்மைப் பெறுபேறுகளை எதிர்பார்த்த பெறுபேறுகளுடன் ஒப்பிடுகின்றன. பாதீட்டுக் கட்டுப்பாடானது முகாமைக் கட்டுப்பாட்டிற்கு விளைதிறனான உபாயமாக இருப்பினும் அது சில வரையறைகளைக் கொண்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

பாதீட்டுக் கட்டுப்பாட்டின் மூன்று (03) வரையறைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட ஓவல் கம்பனியின்** 2019 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **2018/19** | **2017/18** |
|---|---|---|
| விற்பனை | 1,750,000 | 1,400,000 |
| மொத்த இலாபம் | 496,920 | 430,000 |
| ஆரம்பத் தொக்கு | 285,000 | 235,000 |
| கொள்வனவுகள் | 1,268,080 | 1,020,000 |
| இறுதித் தொக்கு | 300,000 | 285,000 |
| வியாபார வருமதிகள் | 221,000 | 168,000 |
| வியாபார சென்மதிகள் | 342,100 | 286,800 |

ஆண்டில் 365 நாட்களெனக் கொள்க. சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018/19 ஆம் ஆண்டிற்கு **வரையறுக்கப்பட்ட ஓவல் கம்பனியின்** தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தினை (working capital cycle) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட மக்ஸ்** கம்பனியானது பீங்கான் குவளைகளை (ceramic mugs) உற்பத்தி செய்து அவற்றை சில்லறை வியாபாரிகள் ஊடாக விற்பனை செய்கிறது. வாடிக்கையாளர் ஒருவர் தனது நிறுவனப் பரிசாக வழங்குவதற்கென ஒவ்வொன்றும் ரூபா 400/- விலையில் தனிப்பயனாக்கப்பட்ட (வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப உற்பத்தி செய்யப்படும்) 1000 பீங்கான் குவளைகளை உற்பத்தி செய்வதற்காக **வரையறுக்கப்பட்ட மக்ஸ்** கம்பனியை நாடியுள்ளார். இந்தத் தனிப்பயனாக்கப்பட்ட பீங்கான் குவளைகளின் உற்பத்தி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| நேர் பொருள் (குவளையொன்றிற்கு 250 கிராம் விசேட களிமண்) | - | **குறிப்பு 1** |
| குவளையொன்றிற்கான ஏனைய பொருட்கள் | - | ரூபா 125/- |
| குவளையொன்றிற்கான நேர் கூலி (மணித்தியாலத்திற்கு ரூபா 600/- வீதம் 18 நிமிடங்கள்) | - | **குறிப்பு 2** |
| குவளையொன்றில் படம் அச்சிடுவதற்கான கிரயம் | - | ரூபா 36/- |
| குவளையொன்றிற்கான பொதியிடல் கிரயம் | - | ரூபா 14/- |

**குறிப்பு 1:**

கம்பனியானது வழமையாக உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விசேட களிமண்ணைப் பயன்படுத்து வதில்லை என்பதுடன் இதனை தனிப்பயனாக்கப்பட்ட குவளைகளின் உற்பத்திக்கு மாத்திரமே பயன்படுத்துகிறது. கம்பனி இருப்பில் கிலோகிராம் ஒன்று ரூபா 1,400/- விலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 180 கிலோகிராம் விசேட களிமண் உள்ளது. அதற்கு மீள்விற்பனைப் பெறுமதி இல்லை. களிமண்ணைச் சந்தையில் கொள்வனவு செய்வதானால், கிலோகிராமொன்றின் நடப்புச் சந்தை விலை ரூபா 1,800/-.

**குறிப்பு 2:**

தற்போது மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 600/- வீதம் நேர்கூலி செலுத்தப்படுகின்றது. சம்பளம் செலுத்தப்படும் 340 கூலி மணித்தியாலங்கள் தற்போது வேலையில்லாது சோம்பலாக (idle) உள்ளதுடன் அவர்களை இந்த உற்பத்திக் கட்டளைக்குப் பயன்படுத்த முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

தனிப்பயனாக்கப்பட்ட குவளைகளுக்கான கட்டளையுடன் தொடர்புடைய கிரயத்தைக் (relevant cost) **கணிப்பிடுவதுடன்,** இந்த விசேட கட்டளையை ரூபா 400/- விலையில் ஏற்க வேண்டுமா, இல்லையா எனக் **கூறுக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**கிளிக்.கொம்** என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து இலங்கையினுள் விநியோகிப்பதற்காக ஒன்லைனில் (online) விற்பனை செய்கின்ற ஓர் ஒன்லைன் சில்லறை வியாபார நிறுவனமாகும். இந்தக் கம்பனி செல்லிட உபகரணங்களுடன் பயன்படுத்தப்படும் நவீன இலத்திரனியல் பொருட்களான பொருள் **M** மற்றும் பொருள் **N** ஆகியவற்றுள் ஒன்றினை அறிமுகப்படுத்த எண்ணுகின்றது.

பொருள் **M** இலங்கைக்குப் புதியது. பொருள் **N** ஐ விட பொருள் **M** இன் கேள்வி மட்டத்தினை எதிர்வு கூறுதல் கடினம். மேலும் பொருள் **M** இன் கொள்வனவுக் கிரயம் கட்டளைக் கணியத்தின் அளவுடன் மாறுபடும். **கிளிக்.கொம்** ஆனது தொடர்புபட்ட நிகழ்தகவுகளுடன் பொருள் **M** க்கான கேள்வி மற்றும் கொள்வனவுக் கிரயங்களைக் கீழ்வருமாறு மதிப்பிட்டுள்ளது:

| கேள்வி (அலகுகள்) | நிகழ்தகவு | கட்டளைக் கணியம் (அலகுகள்) | அலகொன்றின் கொள்வனவுக் கிரயம் (ரூபா) |
|---|---|---|---|
| 10,000 | 0.26 | 10,000 | 2,800 |
| 20,000 | 0.30 | 20,000 | 2,600 |
| 30,000 | 0.28 | 30,000 | 2,300 |
| 40,000 | 0.16 | 40,000 | 2,050 |

பொருள் **M** ஆனது அலகொன்று ரூபா 3,000/- விலையில் விற்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் விநியோகக் கிரயமாக அலகொன்றிற்கு ரூபா 580/- ஐக் கம்பனி செலவு செய்யும்.

பொருள் **N** இலங்கையில் வழமையாக பயன்படுத்தப்படுவதுடன் கீழ்வரும் கேள்வி மட்டங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன:

| கேள்வி (அலகுகள்) | நிகழ்தகவு |
|---|---|
| 150,000 | 0.70 |
| 260,000 | 0.30 |

பொருள் **N** ஆனது அலகொன்று ரூபா 400/- விலையில் விற்கப்படும். பொருளின் அலகொன்றிற்கான கொள்வனவுக் கிரயம் ரூபா 230/-. அலகொன்றின் விநியோகக் கிரயம் ரூபா 140/-.

**நீங்கள் செய்யவேண்டியது:**

எதிர்பார்ப்புப் பெறுமதியின் (expected value) அடிப்படையில் **கிளிக்.கொம்** அறிமுகப்படுத்த வேண்டிய பொருள் எதுவென **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட MG கம்பனி** பொருன் **R** யினை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியானது பொருள் **R** இன் 12,000 அலகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பாதிட்ட போதிலும் உண்மையில் உற்பத்தி செய்த / விற்பனை செய்த அலகுகளின் எண்ணிக்கை 11,800 ஆகும். 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | **பாதீடு (ரூபா)**<br>12,000 அலகுகள்) | **உண்மையானது (ரூபா)**<br>(11,800 அலகுகள்) |
|---|---:|---:|
| விற்பனை | 3,960,000 | 3,953,000 |
| நேர் பொருள் | (780,000) | (755,200) |
| நேர் கூலி | (1,920,000) | (1,899,800) |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | (795,000) | (817,600) |
| மாறும் விற்பனைச் செலவுகள் | (140,000) | (124,200) |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | (114,000) | (119,000) |
| நிலையான விற்பனைச் செலவுகள் | (100,000) | (100,000) |
| **இலாபம்** | **111,000** | **137,200** |

ஆண்டின் ஆரம்பத்திலோ, இறுதியிலோ தொக்குகள் இருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நெகிழ்வுப் பாதீட்டின் (flexible budget) அடிப்படையில் எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி தொழிற்பாட்டுக் கூற்றினைத் / பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட பிரைம் கம்பனி** பொருள் **Q** வினை மூன்று வேறுபட்ட அளவுகளில் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. பொருள் **Q** வின் நியமக் கிரய அட்டையில் இருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

| | **ரூபா (அலகொன்றிற்கு)** | | |
|---|---:|---:|---:|
| | **சிறிய** | **நடுத்தரம்** | **பெரிய** |
| நேர் பொருட்கள்: | | | |
| மூலப்பொருள் **X** (மீற்றர் ரூபா.100/- வீதம்) | 100 | 200 | 275 |
| மூலப்பொருள் **Y** (மீற்றர் ரூபா 300/- வீதம்) | 150 | 300 | 450 |
| நேர் கூலி | 450 | 608 | 675 |
| மாறும் மேந்தலைகள் | 120 | 142 | 180 |
| | 820 | 1,250 | 1,580 |
| விற்பனை விலை | 1,000 | 1,550 | 2,100 |

2020 பெப்ரவரி மாதத்தில் மூலப்பொருட்கள் **X** மற்றும் **Y** க்கான வழங்கல் வரையறைகள் மூலப்பொருள் **X** இற்கு 30,000 மீற்றர்கள் எனவும் மூலப்பொருள் **Y** க்கு 20,000 மீற்றர்கள் எனவும் கொள்வனவு (பெறுகை) முகாமையாளர் எதிர்வுகூறுகின்றார். 2020 பெப்ரவரி மாதத்தில் மூன்று வேறுபட்ட அளவுகளுக்குமான கேள்வி சிறிய தரத்திற்கு 10,000 அலகுகள், நடுத்தரத்திற்கு 8,500 அலகுகள் மற்றும் பெரிய தரத்திற்கு 4,200 அலகுகள் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2020 பெப்ரவரி மாதத்திற்கு **வரையறுக்கப்பட்ட பிரைம் கம்பனியின்** உற்பத்தித் திட்டத்திற்கான வரையறைக் காரணி / காரணிகளை **இனங்காண்க.** *(உமது விடைக்கு ஆதரவாக கணிப்பீடுகளைத் தருக)* (04 புள்ளிகள்)

(b) வளங்களின் கிடைப்பனவு அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் **கணிக்குக.** (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) **ரெக்ஸ் PLC** ஆனது கீழ்வரும் மூலதனக் கட்டமைப்பினைக் கொண்ட ஒரு நிரற்படுத்தப்பட்ட கம்பனியாகும்:

| | **பங்குகள் / தனிச்சங்களின் எண்ணிக்கை** | **பங்கு / தனிச்சம் ஒன்றின் வழங்கல் விலை (ரூபா)** | **பங்கு / தனிச்சம் ஒன்றின் சந்தை விலை (ரூபா)** |
|---|---|---|---|
| சாதாரண பங்குகள் | 15,000,000 | 10 | 14 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் | 1,000,000 | 10 | 12 |
| 12 % மீட்கப்படக்கூடிய தனிச்சங்கள் | 800,000 | 100 | 90 |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) சாதாரண பங்கொன்றிற்கு பங்கிலாபமாக ரூபா 2.52 செலுத்தப்படுவதுடன் எதிர்காலத்திலும் இந்தத் தொகையினைப் பங்கிலாபமாகச் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

(2) முன்னுரிமைப் பங்குகளுக்கு நிலையான பங்கிலாபமாக பங்கொன்றிற்கு ரூபா.1.50 செலுத்தப் படுகிறது.

(3) 12 % தனிச்சங்கள் இன்னும் 5 ஆண்டுகளில் தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் மீட்கப்படும்.

(4) கம்பனி ஆண்டிற்கு 28 % இல் வருமான வரி செலுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(a) சாதாரண பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி மூலதன நிறையேற்றிய சராசரிக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட டோனி கம்பனியானது** பல்பொருள் அங்காடிகளின் (supermarkets) ஊடாக விற்பனை செய்யப்படும் வெதுப்பகப் பொருட்களை உற்பத்தி செய்வதில் விசேடத்துவம் பெற்றுள்ளது.

**டோனி கம்பனி** புதிய கலவை இயந்திரமொன்றினைப் பயன்படுத்தி புதிய வகையான வெதுப்பகப் பொருட்களை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கிறது.

(1) புதிய கலவை இயந்திரம் பற்றிய பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

| | **புதிய கலவை இயந்திரம்** |
|---|---|
| முதலீடு | ரூபா 34,000,000/- |
| இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் | 5 ஆண்டுகள் |
| பயன்தரும் ஆயுட்கால முடிவில் விற்பனைப் பெறுமதி | ரூபா 14,400,000 |
| கி.கிராம் ஒன்றிற்கான மாறும் கலவைக் கிரயம் | ரூபா 16/- |
| ஆண்டிற்கான நிலையான பராமரிப்புக் கிரயம் | ரூபா 1,900,000/- |
| வரித் தேவைகளுக்கான ஆண்டிற்கான மூலதன விடுதொகை (capital Allowance) | 25 % |

(2) புதிய கலவை இயந்திரம் மீதான அடுத்த 5 ஆண்டுகளுக்கான அந்த நோக்கத்திற்கான விற்பனைகள் மற்றும் மேந்தலைக் கிரயங்கள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| **ஆண்டு** | **உற்பத்தியும் விற்பனையும் (கி.கிராம்)** | **விற்பனைப் பெறுமதி (ரூபா)** | **மேந்தலைக் கிரயம் (மாறும் கலவைக் கிரயம், நிலையான பராமரிப்புக் கிரயம், இயந்திரம் மீதான தேய்மானம் ஆகியன நீங்கலாக) (ரூபா)** |
|---|---|---|---|
| 1 | 9,500 | 12,113,000 | 3,634,000 |
| 2 | 12,000 | 16,218,000 | 4,866,000 |
| 3 | 14,000 | 19,278,000 | 5,784,000 |
| 4 | 14,000 | 19,635,000 | 5,891,000 |
| 5 | 14,000 | 20,171,000 | 6,052,000 |

(3) கம்பனி ஆண்டிற்கு 30 % இல் வருமான வரி செலுத்துகின்றது.

(4) கம்பனி அதன் இயந்திரங்களை அவற்றின் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்கின்றது.

(5) கம்பனியின் மூலதனக் கிரயம் 14 %.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிகர இற்றைப் பெறுமதியை (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) புதிய கலவை இயந்திரத்தினைக் கொள்வனவு செய்ய வேண்டுமா என காரணங்களுடன் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **வரையறுக்கப்பட்ட ரோகோ கம்பனி** பொருள் **X** இனை உற்பத்தி செய்து, அலகொன்று ரூபா 800/- விலையில் விற்பனை செய்கின்றது. பொருள் **X** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டுள்ளன:

| | **ரூபா (அலகொன்று)** |
|---|---:|
| நேர் பொருட்கள் | 240 |
| நேர் கூலி (மணித்தியாலம் ரூபா 350/- வீதம்) | 280 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் (நேர்கூலி மணித்தியாலத்திற்கு ரூபா 60/- வீதம்) | 48 |
| மாறும் பொதியிடற் கிரயம் | 30 |
| மாறும் விற்பனை, விநியோகக் கிரயம் | 15 |
| | **613** |

பொருள் **X** க்கான வருடாந்தக் கேள்வி 16,000 அலகுகள், வருடாந்த நிலையான உற்பத்திக் கிரயம் ரூபா 750,000/-, வருடாந்த நிலையான விற்பனை, விநியோகக் கிரயம் ரூபா 460,000/-.

**வரையறுக்கப்பட்ட ரோகோ கம்பனி** அலகொன்று ரூபா 680/- விலை வீதம் பொருள் **X** இனைப் பெற்றுக் கொள்வதற்கு வழங்குநர் ஒருவரிடமிருந்து கொடைமுனைவு (offer) ஒன்றினைப் பெற்றுள்ளது. அந்த வழங்குநரிடமிருந்து உற்பத்தி வெளிமூலமிடப்படின் (outsourced) **ரோகோ கம்பனி** மேலதிகமாக மாறும் மற்றும் நிலையான விற்பனை, விநியோகக் கிரயங்களை மாத்திரம் செலவு செய்யவேண்டி ஏற்படும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

பொருள் **X** இன் உற்பத்தியை வெளிமூலமிட வேண்டுமா என்பதைக் காரணங்களுடன் **மதிப்பிடுக.**
*(உமது விடைக்கு ஆதரவாக கணிப்பீடுகளைத் தருக)* (08 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட லீட் கம்பனி** வேறுபட்ட இரண்டு மூலப்பொருட்களான **A** மற்றும் **B** யினைப் பயன்படுத்தி பொருள் **L1** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. பொருள் **L1** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன:

| | **ரூபா (அலகொன்றிற்கு)** |
|---|---:|
| நேர் பொருள்: | |
| மூலப்பொருள் **A** (கி.கிராம் ரூபா 250/- வீதம் 3 கி.கிராம்) | 750 |
| மூலப்பொருள் **B** (கி.கிராம் ரூபா 700/- வீதம் 0.25 கி.கிராம்) | 175 |
| நேர் கூலி (மணித்தியாலம் ரூபா 480/- வீதம் 15 நிமிடங்கள்) | 120 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் (மணித்தியாலம் ரூபா 160/- வீதம்) | 40 |
| மொத்த மாறும் கிரயம் | 1,085 |
| விற்பனை விலை | 1,500 |
| **பங்களிப்பு** | **415** |

**வரையறுக்கப்பட்ட லீட் கம்பனி** 2019 ஆம் ஆண்டில் 17,500 அலகுகளை விற்பனை செய்யப் பாதீடு செய்திருந்த போதிலும் உண்மையில் 16,700 அலகுகளையே அவ்வாண்டிற்காக விற்பனை/ உற்பத்தி செய்தது. 2019 ஆண்டிற்கு பாதீடு செய்யப்பட்ட நிலையான மேந்தலைகள் ரூபா 4,625,000/- ஆகும்.

2019 ஆம் ஆண்டிற்கான உண்மையான தகவல்கள் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---:|
| விற்பனைகள் | 25,718,000 |
| நேர்பொருட்கள் | |
| மூலப்பொருள் **A** (52,600 கி.கிராம்) | 12,361,000 |
| மூலப்பொருள் **B** (4,080 கி.கிராம்) | 2,917,200 |
| நேர் கூலிக் கிரயம் (4,200 மணித்தியாலம்) | 2,024,400 |
| மாறும் மேந்தலைகள் | 66,900 |
| நிலையான மேந்தலைகள் | 4,786,500 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(i) நேர் பொருட் கலவை முரண் (Direct Material Mix Variance) (04 புள்ளிகள்)

(ii) நேர் பொருள் விளைவு முரண் (Direct Material Yield Variance) (04 புள்ளிகள்)

(iii) நேர் பொருள் விலை முரண் (Direct Material Price Variance) (03 புள்ளிகள்)

(b) பாதிடப்பட்ட பங்களிப்பினை உண்மையான பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்வதற்கு, மேலே கணிக்கப்பட்ட முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ள முரண்களையும் பயன்படுத்தி தொழிற்பாட்டுக் கூற்று ஒன்றினைத் **தயாரிக்குக**:

| | | |
|---|---:|---|
| நேர் கூலி வீத முரண் | 8,400 | பாதகம் |
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 12,000 | பாதகம் |
| மாறும் மேந்தலைச் செலவின முரண் | 605,100 | சாதகம் |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 4,000 | பாதகம் |
| விற்பனை விலை முரண் | 668,000 | சாதகம் |
| விற்பனை எல்லைக் கனவளவு முரண் | 332,000 | பாதகம் |

(06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி *C* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |